Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 27

செவ்வாய்க்கிழமை
23 டிசெம்பர் 2025

மார்கழி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## வந்தார் ஜெய்சங்கர்

கொழும்பு, செப். 23
இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேற்றுமாலை இலங்கையை வந்தடைந்தார். பிரதமர் மோடியின் விசேட தூதுவராகவே இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளார்.

»11

திஸ்ஸ விகாரைக்காக அபகரிக்கப்பட்ட

# 2 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிப்பு

அரசாங்கம் திட்டம்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 23**
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில், அண்ணளவாக இரண்டு ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

»11

## இந்தியாவுடனான ஒப்பந்தத்தை உடன் வெளிப்படுத்த வேண்டும்

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 23
இந்தியப் பிரதமர் மோடியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்த

»11

## ஆக்கிரமிப்பின் கருவிகளாக பௌத்த சின்னங்கள்

பொலிஸ் அராஜகத்துக்கு எதிராக பல்கலை மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 23
திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில், ஐந்து பேர் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களால்

»11

## சுண்டிக்குளம் காட்டில் 53 கிலோ கஞ்சா மீட்பு

விரிவு பக்கம்:-02

திஸ்ஸ விகாரை விடயத்தில்

## பொறுமைக்கு எல்லையுண்டு

இலங்கை பௌத்த நாடு சரத் வீரசேகர முழக்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 23
திஸ்ஸ விகாரை விடயத்தில் எமது பொறுமையை மீண்டும் மீண்டும் சோதிக்கக்கூடாது. இலங்கை பௌத்த நாடென்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்க வேண்டும் - இவ்வாறு

»11

உகண்டாவில் பதுக்கப்பட்ட

## ராஜபக்சக்களின் நிதியை ஏன் இன்னும் மீட்கவில்லை?

நாமல் ராஜபக்ச கேள்வி

கொழும்பு, டிசெ. 23
உகண்டாவில் ராஜபக்சக்களால் பதுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பொலரை ஏன் இன்னமும் மீட்கவில்லை? என்று நாமல் ராஜபக்ச கேள்வி

»11

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து

## 'லஞ்ச் சீற்' பாவனைக்கு பருத்தித்துறையில் தடை

யாழ்ப்பாணம், டிசெ. 23
உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் எதிர்வரும் முதலாம் திகதிமுதல் லஞ்ச் சீற் பாவனை முற்றாகத் தடைசெய்யப்படும் என்று

»11

முள்ளிவாய்க்காலை உள்ளடக்கிய

## கரைதுறைப்பற்று சபையை கைப்பற்றியது திசைகாட்டி!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையீனத்தால் இந்த நிலை

முல்லைத்தீவு, டிசெ. 23
கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு நேற்று இடம்பெற்ற நிலையில், தேசிய மக்கள் சக்தியின் இமக்குலேற்றா புஸ்பானந்தன் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.
கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக தமிழரசுக் கட்சியின் சின்னராசா லோகேஸ்வரன் செயற்பட்டு வந்தார்.

»11

## டித்வா புயலால் இலங்கைக்கு 4.1 பில்லியன் டொலர் இழப்பு!

கொழும்பு, டிசெ. 23
டித்வா புயலால் இலங்கைக்கு அண்ணளவாக 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று உலக வங்கி மதிப்பிட்

»11




## கிரவலை அகழ்ந்தெடுத்து கிராமத்தை அழிக்காதே!

செட்டிகுளத்தில் போராட்டம்

வவுனியா, டிசெ. 23
வவுனியா - செட்டிகுளம் பிரதேச செயலாளர் பகுதிக்கு உட்பட்ட கங்கன்குளம் பகுதியில், கிரவல் அகழ்வதைத் தடை

»11

## கட்டைக்காடு கிழக்கில் வீடொன்றில் தாக்குதல்

வன்முறைக் குழு அடாவடி

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியில் உள்ள வீடொன்றின் மீது வன்முறைக் குழுவால் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4293 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 11 22 37 69 |
| விசேட எழுத்து | P |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1360 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 19 36 38 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0319 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 4 8 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2399 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 13 24 64 68 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6051 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 5 8 4 9 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2081 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 20 61 69 77 |
| விசேட எழுத்து | X |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0167 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 24 33 65 |

# 29 இலட்சம் வீடுகளுக்கு 25,000 ரூபா விடுவிப்பு

## அனர்த்த நிவாரண சேவை நிலையம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.23

டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சீரமைப்பதற்கு வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு, இதுவரை 69.56 சதவீதமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் ஏற்பட்ட டித்வா பேரிடரால் 6 இலட்சத்து 42 ஆயிரத்து 375 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவு வழங்கத் தகுதியான வீடுகளாக 4 இலட்சத்து 69 ஆயிரத்து 457 வீடுகள் கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றில் 29 இலட்சத்து 9 ஆயிரத்து 513 வீடுகளுக்கு இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக அரசாங்கம் 7.487 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. உடனடி நிவாரணங்களுக்காக அரசாங்கம் இதுவரை 4 ஆயிரத்து 197 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. பெருமளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகள் கிடைத்துவருகின்றன. அவை தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நேரடி ஒருங்கிணைப்புடன் விநியோகிக்கப்படுகின்றன. பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்ட உணவு, உபகரணங்கள், மருந்துகள் உள்ளிட்ட பொருள்கள் விடுவிக்கப்பட்ட பின்னர், ஒரு கொடவத்தை களஞ்சியசாலையிலிருந்து தேவைக்கேற்ப மாவட்டச் செயலர்கள் ஊடாக அந்தந்த மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த உதவிகள் அனைத்தும் முறையான பொறிமுறையின் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன-என்றார். (க-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0759 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 2 6 1 3 6 3 |

**Super Ball**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3025 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 37 48 64 74 |

**சனிதா**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 05 11 63 68 |
| வெற்றி வாரம் | 5186 |

**SASIRI**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0855 |
| வெற்றி இலக்கம் | 20 40 48 |

**லக்ன ராசி**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| | கன்னி |
| வெற்றி இலக்கம் | 08 14 17 45 |
| சீட்டிழுப்பு வாரம் | 4737 |

**KAPRUKA**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கம் | 32 48 59 60 |
| வெற்றி வாரம் | 2201 |

**அத கோடிபதி**

| | |
|---|---|
| திகதி | 22.12.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 03 09 54 76 |
| வெற்றி வாரம் | 2851 |

## ஐஸ் போதையுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணம், உடுவில்பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 23 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 5 கிராம் 120 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வெள்ளத்துக்கு மேலாக வளர்ந்துள்ள பயிர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் டித்வா புயலால் வெள்ளக்காடாகக் காணப்பட்டு அழிவடைந்ததாக மதிப்பிடப்பட்ட நெல்வயல்களில் நீர் வழிந்தோடியதால் பயிர்கள் வெள்ளத்திற்கு மேலாக வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது.

நெற்செய்கையாளர்களின் முயற்சியினால் வெள்ளம் வழிந்தோடியதால் வெள்ளம் மூடியிருந்த பயிர்கள் தற்போது வளர்ந்து காணப்படுகின்றன. நெற்செய்கையாளர்கள் பயிர்களுக்கு உரம் விசிறும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (எ-41-9)



## புதையுண்ட உடல்களை மீட்க நாய்களை வழங்கக் கோரிக்கை

கொழும்பு, டிசெ.23

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி புதையுண்டவர்களின் உடல்களைக் கண்டறிவதற்குத் தேவையான விசேட மோப்ப நாய்களை வழங்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது-காணாமற்போனவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படும் நிலையில், அவர்களின் உடல்களைக் கண்டறியும் தேடுதல் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. மண்சரிவுகளில் சிக்கி மிகவும் ஆழமாகப் புதையுண்டுள்ள உடல்களைக் கண்டறிவது பெரும் சவாலாக உள்ளது.

அனர்த்தங்களின்போது மனித உடல்களை மோப்பம் பிடிப்பதில் விசேட பயிற்சி பெற்ற மோப்ப நாய்களை வழங்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது-என்றார். (எ-இ)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

அம்பலாங்கொடைநகரிலுள்ளவர்த்தகநிலையமொன்றின் முகாமையாளர்மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இரண்டு குற்றக் கும்பல்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் விளைவாகவே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த நபர் குற்றக்கும்பல் உறுப்பினர்களுடன் தொடர்புகளைப் பேணியவர் என்றும் கூறப்படுகின்றது. துப்பாக்கிச்சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் அம்பலாங்கொடை குருந்துவத்த ஆதாதோல வீதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. (எ-இ)



## சுண்டிக்குளம் காட்டில் 53 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி,டிசெ.23

சுண்டிகுளம் கலப்புக் காட்டுப்பகுதியில், மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 கிலோ 500 கிராம் கேரளக் கஞ்சா பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இராணுவத்தினர், தருமபுரம் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். அதில் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கையின்

# கடன் மீளச்செலுத்தலை இடைநிறுத்த வேண்டும்

### பொருளாதார நிபுணர்கள் கோரிக்கை

**கொழும்பு, டிசெ.23**

**டித்வா புயலால் ஏற்பட்டுள்ள அழிவுகளைச் சமாளிக்கும்வகையில் இலங்கையின் வெளிநாட்டுக்கடன் மீளச்செலுத்தலை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று உலகின் முன்னணிப் பொருளாதார நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

2022ஆம் ஆண்டில் வங்குரோத்து நிலையை அடைந்து கடந்த ஆண்டு 9 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போதைய சூழலில் அரசாங்க வருமானத்தில் 25 வீதம் கடனுக்காகச் செலவிடுவது சாத்தியமற்றது என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கை தற்போது கடுமையான பொருளாதார அதிர்ச்சியை எதிர்கொண்டுள்ளது. ஏற்கனவே வரையறுக்கப்பட்ட நிலையிலுள்ள நாட்டின் நிதி இடைவெளியை இந்தப் பேரழிவு முற்றாக விழுங்கிவிடும். தற்போதைய சூழ்நிலைக்கேற்ப புதிய கடன்மறுசீரமைப்புத்திட்டம் அவசியமானது என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-41)

## வேலைவாய்ப்புக்காக 3 இலட்சம் பேர் வெளிநாடுகளுக்கு

கொழும்பு, டிசெ.23

இந்த ஆண்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், வேலைக்காக வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தைத் தாண்டியது இது மூன்றாவது முறையாகும். 2025ஆம் ஆண்டில், வேலைக்காக வெளிநாடு சென்றவர்களில் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 85 பேர் ஆண்கள் என்றும், ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 106 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் கடந்த 11 மாதங்களில் வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு 7.19 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 673.4 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்குக் கிடைத்துள்ளது என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## கொள்கலன் நெருக்கடியை குறைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, டிசெ.23

நடப்பாண்டின் பிற்பகுதியில் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மறு ஏற்றுமதிக் கொள்கலன்களின் அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் துறைமுகத்தின் செயற்பாடுகள் மற்றும் அனுமதி நடவடிக்கைகளில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான கலந்துரையாடலை நடத்துவதற்கு அமைச்சர் அநுர கருணாதிலக்க பணிப்புரை விடுத்துள்ளார் என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-41-இ)



## அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படச் சாத்தியமில்லை

கொழும்பு, டிசெ.23

டித்வா புயல் காரணமாக நாடளாவிய ரீதியில் விவசாயக் காணிகள் சேதமடைந்துள்ளபோதிலும் சந்தையில் அரிசிப் பற்றாக்குறை ஏற்படாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மரக்கறிக்கான பற்றாக்குறை எதிர்வரும் ஒரு சில மாதங்களுக்கு நீடிக்கும். சந்தையில் குறிப்பிடத்தக்க உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்தப் பருவத்தில் சுமார் 80 சதவீத நெல் நிலங்களில் பயிர்ச்செய்கையை முன்னெடுக்க முடியுமென நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-41-இ)

## பண்டிகைக்கால பாதுகாப்புக்காக செயற்பாட்டு அறை நிறுவ முடிவு

பண்டிகைக்காலத்தில் பொதுப்பாதுகாப்பு மற்றும் அமைதியை உறுதிசெய்வதற்கும், அமைதியான கொண்டாட்டத்துக்குத் தேவையான சூழலை உருவாக்குவதற்கும் இராணுவத் தலைமையகத்தை மையமாகக் கொண்ட ஒரு செயற்பாட்டு அறையை நிறுவ பாதுகாப்புச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

பண்டிகைக் காலம் முடியும் வரை தொடர்ந்து செயற்படும் இந்தச் செயற்பாட்டு அறை, முப்படைகளுக்கும் இலங்கை பொலிஸாருக்கும் இடையே நெருக்கமான ஒத்துழைப்பை உறுதி செய்யும் முக்கியமான ஒருங்கிணைப்பு மையமாகச் செயற்படும். பண்டிகைக் காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு பாதுகாப்புச் சவால் அல்லது அவசரநிலைக்கும் உடனடி, ஒழுங்கான மற்றும் உகந்த பதிலை உறுதிசெய்வதே இந்தக் கூட்டு ஒருங்கிணைப்புப் பொறிமுறையின் முதன்மை நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## இந்த அடி காணுமா?

பள்ளிக்கூடங்கள் எண்டாலே பிக்கல் பிடுங்கல்கள், சிக்கல்கள், சிறுமைப்படுத்தல்கள் எண்டு எல்லாமே இருக்கும். அதிலையும் பள்ளிக்கூட பிரின்சிப்பல்மார், ரீச்சர்மார் கெட்டிக்காரப் பிள்ளையளுக்குக் கிடைக்கவேண்டிய அங்கீகாரத்தையும், பேர் புகழையும் தங்களுக்கு அணைவாக இல்லாட்டி கொஞ்சம் பெரிய இடத்துப் பிள்ளையளுக்குக் குடுக்கிறது இப்பவும் எல்லா இடமும் நடக்குதுதான். அப்பிடி ஒரு சம்பவம் கொழும்பில இருக்கிற சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரியிலயும் நடந்திருக்கு. ஆனால் அதில பாதிக்கப்பட்ட பிள்ளை, தன்னை அவமதிச்சவைக்குக் குடுத்த செருப்படியைப் பற்றித்தான் இப்ப பேஸ்புக்கில ஒரே கதை.

அந்தப் பிள்ளையின்ர பெயர் சனித்மா சினாலி. படிப்பிலையும் விளையாட்டிலையும் சரியான கெட்டிக்காரி. கொமன்வெல்த் போட்டிக்குப் போன இலங்கை ரீமுக்கு இந்தப் பிள்ளைதான் தலைமை தாங்கியிருக்கிறா. எந்தப் போட்டிக்குப் போனாலும் தங்கப்பதக்கத் தோட வாறபிள்ளை. அதாலபள்ளிக்கூடத்துக்குத்தான் பேரும் புகழும் கிடைச்சுது. அப்பிடிப்பட்ட பிள்ளைக்கு இந்த வருசத்துக்கான பள்ளிக்கூடத்தின்ர உயரிய விருதொண்டைக் குடுக்கத் தீர்மானிச்சிருக்கினம். போனகிழமை நடந்த வர்ணவிருது இரவில ( கலர்ஸ் நைட்) இந்தப் பெரிய விருதை அவாவுக்கு குடுக்கப் போறம் எண்டு அறிவிச்சிருக்கினம். அந்த விழா நடக்கிற அண்டைக்கு விடிய எப்பிடி மேடையில ஏறி விருது வாங்கோணும் எண்டு விருதுக்குத் தெரிவான எல்லாப் பிள்ளையளையும் கூப்பிட்டு ஒத்திகை (ரிகர்சல்) பார்த்திருக்கினம். ஆனால் அண்டைக்கு காலமை இந்த சனித்மா சினாலிக்கு ஒரு எக்ஸாம். அந்த எக்ஸாமுக்கு போறதால தன்னால ரிகர்சலுக்கு வர ஏலாது எண்டு பொறுப்பாசிரியருக்கு அந்தப் பிள்ளை சொல்லியிருக்குது. அதை பொறுப்பாசிரியரும் ஏற்றுக் கொண்டிட்டா. ஆனால் பிரின்சிப்பலுக்குக் கடும் கோபம்.

அவாக்கு பள்ளிக்கூடம் முக்கியமோ? உந்த எக்ஸாம் முக்கியமோ? உவாக்குப் படிப்பிக்கிறன் பாடம் - எண்டு மூக்குக்குமேல பிரின்சிப்பலுக்குக் கோபம் வந்து, சனித்மா சினாலிக்குக் குடுக்க இருந்த விருதை இன்னொரு பிள்ளைக்குக் குடுக்க முடிவு செய்திட்டா. அண்டைக்கு விருது விழாவில சனித்மா சினாலிக்கு முதல் அறிவிச்ச உயரிய விருதைக் குடுக்காமல், பத்தோட பதினொண்டா ஒரு சாதாரண விருதைக் குடுத்திருக்கினம். அதைவாங்க மேடையில ஏறின சனித்மா சினாலி செய்த சம்பவம் தான் ஹைலைட். அந்தப் பிள்ளை விருதை வாங்காமல், மைக்கு முன்னால போய் நிண்டு தனக்கு நடந்த அநீதியை எல்லாருக்கும் சொல்ல, பிரின்சிப்பலுக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப்போட்டுது. பிரின்சிப்பல் அந்தப்பிள்ளையிட்ட போய், மைக்கை நிப்பாட்டச் சொல்லவும், சனித்மா சினாலி தனக்கு நடந்த புறக்கணிப்பைச் சொல்லிப் போட்டுத்தான் இறங்கினவா. இப்ப திணைக்களம் ஆரில பிழை? ஏன் விருதை மாத்தினவை? எண்ட விசாரணையில இறங்கியிருக்கு. கொழும்பில மட்டுமில்லை இஞ்சயும் கன இடங்களில இப்பிடிக் கெட்டிக்காரப் பிள்ளையளுக்குக் கிடைக்கவேண்டிய அங்கீகாரம் கிடைக்கிறேலத்தான் ஆனால் எங்கட பிள்ளையளுக்கு சனித்மா சினாலி மாதிரி துணிச்சல் இல்லாததால அந்த அநீதியள் வெளியில வாறேலை கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய ராசிபலன்

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக் கூடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**துலாம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். தாய்வழிஉறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத் துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

# சுகாதாரத் துறையினருக்கு விசேட பயிற்சித்திட்டங்கள்

## சுகாதார அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.23**

**சுகாதாரத்துறையினரின் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்காக, சுகாதார அமைச்சால் விசேட டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும் என்று சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஈசிஜி, உடற்பயிற்சி ஈசிஜி, ஹோல்டர் கண்காணிப்பு, இதய வடிகுழாய்ப் பரிசோதனை, இதயத் துடிப்பு முடுக்கி (பேஸ்மேக்கர்) போன்ற பரிசோதனைகள் மற்றும் மருந்தியல் அழுத்தப் பரிசோதனை, நடமாடும் இரத்த அழுத்தக் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளில் இருதய வரைபு தொழில்நுட்பவியலாளர்கள் நோயாளர் பராமரிப்புக்குத் தேவையான பங்களிப்பை வழங்குகின்றனர்.

தற்போது சுமார் 500 தொழில்நுட்பவியலாளர்கள் இந்தத் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். சுகாதாரத்துறையினரின் தொடர்ச்சியான தொழில்சார் நிபுணத்துவத் துக்காக விசேட பாடநெறிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மூலம் சுகாதாரச்சேவையின் தரம் உயர்வதுடன், உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் மனப்பாங்கும் விருத்தியடையும்.

சுகாதாரச்சேவையின் எதிர்கால முன்னேற்றத்துக்காக சர்வதேச தரத்துக்கு அமைவாக, இவ்வாறான பயிற்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் இப்பாடநெறி ஒரு பட்டப்படிப்பாக மாற்றப்படவேண்டும். இதன்மூலம் மருத்துவமனைகளுக்கு வருகைதரும் நோயாளர்களுக்கு வினைத்திறனான மற்றும் சிறந்த சேவையை வழங்கமுடியும்-என்றார். (சு-இ)

# குருபூஜைவிழாவும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், டிசெ.23

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் திருவிளையாடற்புராணச் சொற்பொழிவும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூஜை விழாவும் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக் குருக்களால் தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நடத்தப்படவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மிக விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் திருவாளர் சமூகமாமணி பா. தனபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

குருபூஜையை அடுத்து சைவப்புலவர் பிரசங்கச் சக்கரவர்த்தி சி.கா.கமலநாதனின் "நால்வர் நெறியில் நாவலர்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடிவினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாரட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# பன்றித்தலைச்சி அம்மன் மஹோற்சவகால வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ.23

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தின் விசுவாவசு வருட மஹோற்சவகால வழிபாடு நாளைமறுதினம் வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை வரையான பத்துத் தினங்கள் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

பத்துத் தினங்களும் சிறப்பு அபிஷேகம், பூஜை வழிபாடுகள் இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். காலை அபிஷேகம் காலை 9.30 மணியளவிலும், மாலை அபிஷேகம் மாலை 4.05 மணியளவிலும் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.23

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் கைதடி நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க.கயிலைவாசனின் 'பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# ஏல விற்பனை

சாவகச்சேரி, டிசெ.23

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டதும், வழக்குகளின் சான்றுப்பொருள்களாக ஒப்படைக்கப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாமலுள்ள வாகனங்கள், மணல் ஆகியன இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் காலை 9.30 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி கள், உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரப் பெட்டிகள், மோட்டார் லொறிகள், இரட்டைப் பாவனை வாகனம், துவிச்சக்கர வண்டிகள், 36 கியூப் மணல், கத்திகள், கோடரிகள், மண்வெட்டிகள், சவள்கள், தலைக்கவசங்கள் போன்றனவே பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (எ-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பலம் பொருந்தியவனின்
பலத்தைக் குறைப்பதால்
பலவீனனை பயில்வானாக்கமுடியாது.

—ஆபிரகாம் லிங்கன்—

# இதுவா ஜனநாயகம்?

இலங்கையில் புதியதொரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதாகக்கூறி ஆட்சிபீடம் ஏறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்கீழ், வடக்கு-கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நில உரிமைகளும் ஜனநாயகப் போராட்டங்களும் கையாளப்படும் விதம் பெரும் கவலையையும் தார்மீகக் கேள்விகளையும் எழுப்பியுள்ளது. யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு தையிட்டிப் பகுதியில் பொதுமக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து சட்டவிரோதமான முறையில் விகாரை ஒன்று அமைக்கப்பட்ட விவகாரம் நீண்டகாலமாகத் தொடரும் நீதிக்கான போராட்டமாகும். தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை இராணுவத்தினர் கையகப்படுத்தி, அங்கு மத ஆக்கிரமிப்பை முன்னெடுப்பது நல்லிணக்கத்திற்குச் சாவு மணி அடிக்கும் செயலாகும். தேர்தல் காலங்களில் இந்தச் சட்டவிரோதக் கட்டுமானங்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்த அரசாங்கம், ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்த பின்னரும் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்காதது மாத்திரமன்றி, அந்தச் சட்டவிரோத விகாரையின் விகாராதிபதிக்கு பௌத்த கட்டமைப்பின் உயரிய அதிகாரங்களை வழங்கும் நிகழ்வுக்கு அரச அனுசரணை வழங்கியிருப்பது தமிழ் மக்களின் உணர்வுகளைக் காலால் மிதிக்கும் செயலாகும்.

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் ஒருவருக்கு கௌரவப் பதவிகள் வழங்கப்படுவதை எதிர்த்து, அந்த நிலத்தின் உண்மையான உரிமையாளர்களும் மக்கள் பிரதிநிதிகளும் அமைதியான முறையில் போராடுவதை ஜனநாயகம் உறுதிப்படுத்தியிருக்கிறது. ஆனால், தையிட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரங்கேறிய காட்சிகள் ஜனநாயகப் பண்புகளுக்கு முற்றிலும் மாறானவை. விகாரைக்குச் சேதம் விளைவிக்காமலும், பொது ஒழுங்குக்குக் குந்தகம் விளைவிக்காமலும் வீதியில் நின்று அறவழியில் போராடியவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அராஜகம் கண்டிக்கத்தக்கது. ஒரு சட்டவிரோதக் கட்டுமானத்தைப் பாதுகாப்பதற்காக கலகம் அடக்கும் பொலிஸாரைக் குவித்து அமைதியின்மையை ஏற்படுத்தியது யார்? என்ற கேள்வி எழுகிறது. மக்கள் ஆணையுடன் பதவி யேற்ற ஒரு அரசாங்கம், சட் டத்தின் ஆட்சியைக் காக்கத் தவறிவிட்டு, அதிகாரபலத்தைப் பயன்படுத்திப் போராட்டங்களை ஒடுக்க முற்படுவது அதன் தோல்வியையே காட்டுகிறது.

குறிப்பாக, இப்போராட்டத்தில் ஈடுபட்ட வேலன் சுவாமிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்ட விதமும், அதன்போது வேலன் சுவாமிகள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறையும் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதவை. ஒரு மதத்தலைவர் மீதான இத்தகைய தாக்குதல் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தின் மீதான தாக்குதலாகவே பார்க்கப்படும். சட்டவிரோதமாக விகாரை அமைத்தவருக்கு அரசாங்கத் தரப்பு அமைச்சர்களின் முன்னிலையில் கௌரவமளிப்பதும், அதே சட்டவிரோதத்தை எதிர்த்துப் போராடும் ஒரு தமிழ் மதத்தலைவரை வீதியில் வைத்துத் தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கும் நிலையை ஏற்படுத்துவதும் என்ன மாதிரியான ஜனநாயகம்? இதுவா தேசிய மக்கள் சக்தி பேசும் 'மாற்றம்' என்ற கேள்வி இன்று ஒவ்வொரு தமிழரின் மனதிலும் உரக்க எழுகிறது.

அரசாங்கம் சட்டவிரோதக் கட்டுமானங்களையும் ஆக்கிரமிப்புகளையும் பாதுகாக்கும் கேடயமாகப் பொலிஸாரைப் பயன்படுத்துவதை விடுத்து, பாதிக்கப்பட்ட மக்களின் நில உரிமைகளை உறுதிப்படுத்த முன்வர வேண்டும். அமைதிவழியில் போராடுபவர்களைக் குற்றவாளிகளாகச் சித்திரிப்பதும், நீதிமன்றத் தடையுத்தரவுகளைக் காட்டி மக்களின் குரலை நசுக்குவதும் நீண்டகால அடிப்படையில் இனங்களுக்கு இடையிலான விரிசலையே அதிகப்படுத்தும். தையிட்டி விகாரைப் பிரச்சினையில் அரசாங்கம் காட்டும் பாரபட்சமான அணுகுமுறை, வடக்கு மக்களின் நில அபகரிப்பு அச்சத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின்படி, தையிட்டி சட்டவிரோத விகாரை தொடர்பான மக்களின் கோரிக்கையை ஏற்று நீதி நிலைநாட்டப்படவேண்டும். ஜனநாயகப் போராட்டங்கள் நசுக்கப்படுவதும், மதத்தலைவர்கள் தாக்கப்படுவதும் தொடர்ந்தால், அரசாங்கம் கூறிக்கொள்ளும் 'புதிய அரசியல் கலாசாரம்' என்பது வெறும் கவர்ச்சிகரமான சொல்லாடலாகவே வரலாற்றில் எஞ்சியிருக்கும்.




# வடக்கு உட்பட நாட்டின் காற்றின் தரம் மோசம்!

**கொழும்பு, டிசெ.23**
**நாட்டில் காற்றின் தரம் அண்மைய நாள்களில் மோசமடைந்துள்ளது என்று மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் குணவர்தன தெரிவித்துள்ளார்.**

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களில் காற்றின் தரக்குறியீடு 150 முதல் 200 வரை அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை கடந்த காற்று இயக்கம் மற்றும் வடகிழக்கு பருவமழை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளிலும் இந்த காலகட்டத்தில் இதேபோன்ற நிலைமை காணப்பட்டது. சுவாசப்பிரச்சினையை எதிர்கொள்வோர், உடல்நல பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும். அவசியம் ஏற்பட்டால் மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)



## மின்சார வேலியில் சிக்கிய யானை உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.23
அநுராதபுரம், மரதன்கடவல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு அருகில் உள்ள காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின்சாரவேலியில் சிக்கிக் காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. சுமார் 9.2 அடி உயரமுடைய 25 வயது மதிக்கத்தக்க காட்டு யானை ஒன்றே உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## உயிரிழந்தது வெள்ளைக்கை கிம்பன்

கொழும்பு, டிசெ.23
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் 22 ஆண்டுகளாக வாழ்ந்த வெள்ளைக்கை கொண்ட கிப்பன் குரங்கு உயிரிழந்துள்ளது என்று சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.
கிப்பன் குரங்கு, அதன் பெண் துணையுடன், 2006ஆம் ஆண்டு செக் குடியரசில் இருந்து இலங்கைக்குக்கொண்டு வரப்பட்டது. கடந்த டிசெம்பர் மாதம் கிப்பன் குரங்கு நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், தற்போது உயிரிழந்துள்ளது. (எ-இ)

## இணையவழி மோசடிகள் அதிகரிப்பு

இணையத்தளம் ஊடாக பொருள்களை விற்பனை செய்வதாகக் கூறி பணமோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு எச்சரித்துள்ளது. இணையத்தளம் ஊடாக பொருள்களை கொள்வனவு செய்வதாயின், சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்பில் சரியான தகவல்களை பெற்றுக்கொள்ளவேண்டும் என அதன் பிரதான தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)



# வாகன இறக்குமதி மோசடிகளை தடுப்பதற்கு டிஜிற்றல் இணைப்பு


வாகன இறக்குமதியின் போது இடம்பெறும் வரி ஏய்ப்பு மற்றும் தரவு மோசடிகளைத் தடுப்பதற்காக, சுங்கத் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றுக்கிடையே புதிய டிஜிற்றல் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
சுங்கத் திணைக்களத்தின் 'ASYCUDA World' மென்பொருள் மூலம் வாகனத்தின் இயந்திர இலக்கம், உற்பத்தி ஆண்டு மற்றும் செலுத்தப்பட்ட வரி விவரங்கள் நேரடியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு டிஜிற்றல் முறையில் அனுப்பப்படவுள்ளது. இந்த நேரடித் தரவுப் பரிமாற்றத்தின் மூலம் வாகனங்களின் இயந்திரத் திறனைக் குறைத்துக் காட்டி வரி ஏய்ப்புச் செய்வது மற்றும் உற்பத்தி ஆண்டை மாற்றிப் பதிவு செய்வது போன்ற மோசடிகள் இனிச் சாத்தியப்படாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் வாகனங்களைப் பதிவு செய்வதற்கு முன்னதாக, சுங்கத் தரவுகளை நிகழ்நேரத்தில் சரிபார்க்கும் அதிகாரம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - மார்கழி 09
24.12.2025
சுபநேரம் : 04.56 - 06.26
ராகுகாலம் : 12.26 - 01.56

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதச் சட்டத்துக்குப் பதிலீடாக மிக மோசமான புதிய சட்டவரைவு



## எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.23**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலீடாக, புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் சட்ட வரைவில் மிக மோசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அதைக் கடுமையாக எதிர்க்கின்றோம் என்று இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாது-

தற்போது நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக; பயங்கரவாதத்திலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டம் எனும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி எதிரணியாக இருந்தபோது, பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பிரத்தியேக சட்டமொன்று தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பயங்கரவாதத்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றதே தவிர, பிறிதொரு சட்டத்தின் ஊடாக அந்தச் சட்டம் பதிலீடு செய்யப்படும் என்று கூறப்படவில்லை. தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் புதிதாகப் பிறிதொரு சட்டத்தைக் கொண்டுவருவதை ஏற்றுக் கொள்ளமுடியாது-என்றார். (க-இ)

# எதிர்க்கட்சிகளின் தலைமையை ரணில் ஏற்றாலே ஆட்சிமாற்றம்

## உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரு சிறந்த தலைமைத்துவத்தின்கீழ் பலமாகச் செயற்பட்டால் மட்டுமே ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தமுடியும். இதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவர். தற்போதைய இக்கட்டான நிலையில் அவர் நாடாளுமன்றுக்கு மீண்டும் செல்வது காலத்தின் தேவையாகும் என்று பிவிதுறுஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தைப் புகழ்வது எதிர்க்கட்சிகளின் வேலையில்லை. அதற்குதான் ஆளுங்கட்சியில் 159 உறுப்பினர்கள் உள்ளனர். ஆளுங்கட்சியினர் அரசாங்கத்தின் தவறுகளையும் சரி என்று புகழ்வர். ஏனெனில் அவர்களால் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்கமுடியாது.

அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி, மக்களுக்கு அவற்றை எடுத்துரைப்பதே எதிர்க்கட்சிகளின் பொறுப்பு. அதையே நாங்கள் செய்கின்றோம். அரசாங்கம் சிறந்த முறையில் செயற்பட்டால், அதனை நாங்கள் வரவேற்போம். அனைத்தையும் விமர்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் மனநிலை எமக்கு இல்லை-என்றார். (க-இ)



# அரசாங்கத்தின் கொள்கைக்கு பொலிஸார் செயல்வடிவம்

## தவிசாளர் நிரோஷ் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.23

எமது மண்ணில் பௌத்த சிங்கள பேரினவாதத்தை நிலைநிறுத்தவேண்டும். பௌத்த சிங்கள தேசமாக மாற்றவேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு பொலிஸார். செயல்வடிவம் கொடுக்கின்றனர் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரையை அகற்றக்கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கைதுசெய்யப்பட்டு, விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகளில், பௌத்த சிங்கள பேரினவாத சிங்கள நிகழ்ச்சிநிரலுடன், கட்டப்பட்ட சட்ட விரோத விகாரைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தில் நாங்கள் பங்கெடுத்தோம். எங்களில் ஐவரை தேடித்தேடி பொலிஸார் கைதுசெய்தனர். மக்களின் காணிக்காக நீதியுரிமை வேண்டிப் போராடிய நிலையில், நாம் கைதுசெய்யப்பட்டோம்.

நீதிமன்றத் தீர்ப்புக்குப் பாதகமில்லாமல் ஜனநாயக அகிம்சை வழியிலே நாங்கள் போராடினோம். இலங்கையிலே பௌத்த சிங்கள பேரினவாதம் தொடர்பில் கடந்த காலங்களில் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளைக்கூட பொலிஸார் நடைமுறைப்படுத்தவில்லை. இந்தநிலையில், அமைதிக்கும் சட்டத்துக்கும் மதிப்பளித்து ஜனநாயக ரீதியில் போராடிய நாங்கள், மிலேச்சத்தனமாகக் கைதுசெய்யப்பட்டிருக்கிறோம். இது எங்களின் பாதுகாப்பை, அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது-என்றார். (க-இ)



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை மீண்டும் முன்வைத்துள்ள அரசாங்கம்

## மக்கள் போராட்ட அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.23

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலீடாகத் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவில், முன்னைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டவரைவின் உள்ளடக்கம், முழுமையாகக் காணப்படுகின்றது என்று மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2023ஆம் ஆண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு முன்வைக்கப்பட்டது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் பாரதூரமானதாக இருந்தன. இதற்கு எதிராக தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தேசிய மக்கள் சக்தியினர் எதிர்க்கட்சியில் இருக்கும்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விட்டு, ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதையே கொண்டுவருவது முறையற்றது. இந்தச் சட்டவரைவுக்கு எதிராக பிரதமர் மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் உயர்நீதிமன்றம் செல்வார்களா?, எதிர்ப்பை வெளிப்படுத்துவார்களா?- என்றார். (க-இ)

# தேயிலைத்துறை பாதிக்கப்பட்டாலும் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவிப்பு

இயற்கைப் பேரிடரால் தேயிலைத் தொழிற்றுறை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளபோதும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் மாற்றம் எதுவும் இல்லை. வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய ஜனவரி மாதம் முதல் சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பெருந்தோட்டப் பகுதிகளில் கடும் மழை காரணமாக, சில தினங்களுக்கு தேயிலை பறிக்கமுடியாத நிலைமை காணப்பட்டது. தற்போது மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளதால், தேயிலைத் தொழிற்றுறையும் வழமைபோன்று இயங்குகின்றது. அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேயிலைத் தொழிற்றுறைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில் அறிவிக்கப்பட்டுள்ளமைக்கு அமைவாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரியிலிருந்து சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளம் கிடைக்கும். அதே வேளை உள்நாட்டுச் சந்தையில் தேயிலை விலையில் எவ்வித அதிகரிப்பும் இல்லை-என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் கலைச் சமூகத்தின் ஏற்பாட்டில் இளம் கவித்துவக் கலைஞன் வாகீசனைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். இணுவில் அறிவாலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அழகேசன் அமிர்தலோஜனன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது. (எ-41-66)



## மாவிட்டபுரம் இந்துமயானத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

கொடிகாமம், டிசெ.23
மாவிட்டபுரம் இந்துமயானத்தை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் கடந்த 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. முதற்கட்டமாக மயான முகப்பு வளைவு மற்றும் இளைப்பாறு மண்டபம் ஆகியவற்றிற்கான அடிக்கல் நடும் நிகழ்வு வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.
வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் ஆ.உதயசங்கரின் ஏற்பாட்டில் மாவை பாரதி சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் அபிவிருத்திப்பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன. நிகழ்வில் வலி.வடக்கு பிரதேசசபைச் செயலாளர் சி.சிவானந்தன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் ஆ.உதயசங்கர், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-41-159)

## உதவிகளைக் கையளித்த சந்நிதியான் ஆச்சிரமம்



வவுனியா, டிசெ.23
வவுனியா செட்டிக்குளம் ஞானப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, சிதம்பரபுரம் திருப்பழனி அறநெறிப்பாடசாலை, முதலியார்குளம் வேல்முருகன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றில் கல்விகற்கும் 146 மாணவர்களுக்கு இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.
வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த 10 அறநெறிப்பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் 30 ஆசிரியர்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த உதவிகளை வழங்கினார். (எ-41-66)


## விழிப்புணர்வுச் செயலமர்வு

கொடிகாமம், டிசெ.23
இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் பெற்றோருக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அதில் புதிய கல்விச் சீர்திருத்தம், அனர்த்த முகாமைத்துவம், தொற்று நோய்கள், மாணவர் வரவொழுங்கு, கற்றல் மேம்பாடு ஆகியன தொடர்பாகக் கருத்தூட்டப்பட்டது.
செயலமர்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.பரணீதரன், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், வரணி ஆசிரியவள நிலைய முகாமையாளர் திருமதி ம.சிவனேசன், வரணிப் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்த.கலைவாசன், யாழ்.மாவட்ட அனர்த்தமுகாமைத்துவத் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி விணோயினி, இடைக்குறிச்சி கிராம அலுவலர் சோ.கீர்த்திகா ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-41-159)



டித்வா புயலால் பெரும் அழிவைச் சந்தித்துள்ள, மலையக மக்களுக்கு, விதையனைத்தும் விருட்சம் செயற்றிட்டத்தின் ஊடாக ஆடைகள் மற்றும் உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (க-27)





இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் வருடாந்தத் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வு இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் யாழ்.நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்திலுள்ள சிவதெட்சணாமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் ஊக்குவிப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ-41-66,159)

## பருத்தித்துறை நகரபிதாவின் பங்கேற்புடன் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23
"எமது நகரைக் கட்டியெழுப்ப நகர்வாழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைவோம்" என்ற தொனிப்பொருளில் மக்கள் சந்திப்பு நிகழ்வு தும்பளை கிழக்கு, (உதய சூரியன்) கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பங்கேற்று மக்களுக்கு நகரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்ததோடு மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்தார்.
நிகழ்வில் உதயசூரியன் முன்பள்ளிச் சிறார்களுக்கு ஒரு இலட்சத்து 55ஆயிரம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியத் தொகுதி தவிசாளரினால் கையளிக்கப்பட்டது. இதற்காக 50ஆயிரம் ரூபாவை தமிழ்த் தேசிய முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஒரு இலட்சத்து 5ஆயிரம் ரூபாவை பருத்தித்துறை நகரபிதாவும் வழங்கியிருந்தனர். எதிர்வரும் நாள்களில் தொடர்ந்து மக்கள் சந்திப்புகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-41-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்னை மடியில் 21 . 04 . 1964



இறைவன் திருவடியில் 23 . 11 . 2025

## பேராசிரியை திருமதி துஷ்யந்தி மிகுந்தன்

**திதி : விசுவாவசு வருடம் கார்த்திகை மாத பூர்வபக்க திருத்தியை**


உசன், மிருசுவில் கிராமத்தில் பேரம்பலம் தெய்வானைப்பிள்ளை தம்பதியருக்கு மகளாகப் பிறந்த அமரர் பேராசிரியை திருமதி துஷ்யந்தி மிகுந்தன் அவர்களின் அன்புக்கும் பாசத்திற்கும் உரிய மாணவர்கள் ஆசிரியர்கள் நண்பர்கள் உறவினர் அனைவருக்கும் அவர் வாழ்ந்த காலத்தில் அவருடன் கூடிக்குலாவி அன்பினை ஈய்ந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் அவர் தீராத நோயினால் அவதிப்பட்ட காலங்களில் அவரை அரவணைத்து பராமரித்து ஆலோசனை வழங்கிய யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் தாதிமார்கள் சுகாதார பணியாளர்கள் அலுவலர்கள், தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை மருத்துவர்கள் தாதிமார்கள் சுகாதார பணியாளர்கள் அலுவலர்கள், ஆசிறி வைத்தியசாலை, யாழ்கோல் வைத்தியசாலையின் பொறுப்பாளர் வைத்திய நிபுணர்கள் பணியாளர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவினால் ஆறாத்துயர் அடைந்த வேளையிலும் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் கல்விசாரா நண்பர்கள் நிர்வாக உத்தியோகத்தர்கள், விவசாய பீட மாணவர்கள் அனைவருக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கையிலாசபதி அரங்கில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வினை ஒழுங்கமைத்த விவசாய பீட நலன்புரிவோர் சங்கம் அனுமதியளித்த கலைப்பீடாதிபதி மற்றும் கலந்து கொண்டோர் அனைவருக்கும் தொலைபேசி, வட்ஸப் மற்றும் முகப்புத்தகம் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் சிரந்தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்குல தேவதையின் விருப்புக்கிணாங்க அந்தியேட்டி நிகழ்வுகள் 22-23.12.2025 கீரிமலையிலும் அவர்தம் மனையிலும் சாஸ்திர சம்பிரதாயத்துடன் நடைபெற்று மதியபோசன நிகழ்வுகள் தாய்தந்தையை சுற்றத்தையிழந்து வாழும் மழலைகளுடன் இணைந்து கொண்டாடப்படுகின்றது என்பதனையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள் மற்றும் குடும்பத்தினர்**

(CS/30948) J-1

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை தியாகராசா

**(இராசையா அன் சன்ஸ் jaffna ,
முன்னாள் கனடா கந்தசாமி கோவில் முகாமையாளர்)**

நல்லூர் சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா பொன்னுத்துரை அவர்கள் கடந்த (21-12-2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராசையா - தங்கம்மா தம்பதியாரின் மருமகனும், இரத்தினபூபதியின் (பிள்ளை அக்கா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் சிறிவதனியின் அன்புத் தந்தையும், சிறிதரனின் அன்பு மாமனாரும், லக்ஷன், லக்ஷிகாவின் அன்புப் பேரனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**இராசையா குடும்பத்தினர்**
**077 656 4346**

(CS/60223) J-1

# பதினான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 07 . 1948



உதிர்வு 23 . 12 . 2011

## அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

**(உரிமையார் - விநாயகர் ரேனிங் வேக்ஸ்)**

*"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்."*
2 திமொ 4:7

அப்பா,
நீங்கள் எமைப் பிரிந்து பதினான்கு வருடங்கள் ஆனதே!
எமக்காக எல்லாம் செய்த உங்களின் அன்புக்காகவும்
அரவணைப்பிற்காகவும் ஏங்குகின்றோம்.
படைத்த மாபரன்
உங்களுக்கு தனது அமைதியில் இளைப்பாறுதலையும்
எமக்கு ஆறுதலையும் அருள்வாராக


என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஞானப்பிரகாசர் வீதி, மல்வம்
உடுவில்

(CS 60243) E

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 09 . 09 . 1945



மறைவு 23 . 11 . 2025

சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடி, கேசாவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்தம்பி தங்கவேல்

அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி இன்று (23.12.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் (இல. 1095, K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்) நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 9, கேசாவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/60241) J-1

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மந்தம் ஏற்பட்டாலும் மறுசீரமைப்புத் தொடரவேண்டும்

## பொருளாதார நிபுணர் தனநாத் பெர்னாண்டோ சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.23**

**அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் மந்த நிலைமை ஏற்படக்கூடும். ஆயினும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று பொருளாதார நிபுணர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- 2025ஆம் ஆண்டு ரூபாவின் பெறுமதி 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. அண்மைய தரவுகளுக்கமைய வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் செலவிடும் தொகையிலும் வீழ்ச்சிப் போக்கு அவதானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானம் குறைவாகவே காணப்படுகிறது. டித்வா புயலால் இந்த நிலைமை மேலும் வீழ்ச்சியடையக் கூடும்.

டித்வா புயலானது பொருளாதாரத்தில் பல்வேறு வழிகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக விவசாயம், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் என பெரியளவில் அழிவு ஏற்பட்டுள்ளது. உலக வங்கி அழிவுகள் தொடர்பான மதிப்பீடுகளை ஆரம்பித்துள்ளது. சுமார் 4 பில்லியன் டொலர் அளவிலான அழிவு ஏற்பட்டிருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சுனாமி பேரிடரின் போதான அழிவுக்கு ஒத்ததாகும். அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் மந்தநிலைமையை அடைந்தாலும், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புகள் அவ்வாறே தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். பொருளாதார மறுசீரமைப்புகளில் எரிபொருள் விலைத் திருத்தம் உள்ளிட்ட அடிப்படை பொறிமுறையிலிருந்து விலகக் கூடாது. மத்திய வங்கியால் தொடர்ச்சியாக பொருளாதார ஸ்திரத்தன்மை பேணப்படும் பட்சத்தில், நாட்டை மீளக்கட்டியெழுப்புவது இலகுவானதாக அமையும்-என்றார். (எ-இ)

# கட்சியின் கொள்கையை விட்டு திசைமாறி ஜே.வி.பி.பயணிப்பு

## விமல் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.23

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அதன் ஆரம்பகாலக் கொள்கைகளில் இருந்து விலகி தற்போது திசைமாறிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இருந்த காலத்தில் இருந்த ஜே.வி.பி. இப்போது இல்லை. செயல் என்பதைவிட வாய்ச்சொல் வீரர்களாகவே அந்தக் கட்சியினர் இப்போது செயற்படுகின்றனர்.

அதுமட்டுமல்ல இந்தியா மற்றும் அமெரிக்காவுக்குச் சார்பாகச் செயற்படும் நிலைமையே காணப்படுகின்றது. தெளிவானதொரு கொள்கையும் அந்தக் கட்சியினரிடம் இல்லை.

கட்சித்தலைமையகத்தில் புரட்சியாளர்களின் படங்களை மட்டும் வைத்துக்கொண்டு, அவர்களின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் பயணித்துக்கொண்டிருக்கின்றனர் - என்றார். (ச-இ)

# உரம் பொதியிடும் பையில் கொத்துக்கான ரொட்டிகள்

## உணவகத்துக்கு வழக்கு

மன்னார், டிசெ. 23

மன்னார் மூர்வீதியில் அமைந்திருந்த உணவகம் ஒன்றில் கொத்துத் தயாரிக்க பயன்படும் மூலப்பொருளான ரொட்டி, யூரியா உரம் பொதியிடும் பையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் சுகாதாரத்துறையினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் மன்னார் மூர்வீதியிலுள்ள உணவகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின்போது இந்தச் சுகாதாரச்சீர்கேடு கண்டறியப்பட்டது.

குறித்த உணவகம் அனுமதியின்றி இயங்கி வந்ததுடன் உணவகத்தில் பணிபுரியும் நபர்கள் சுகாதார அனுமதி பெறாமையும் கண்டறியப்பட்டது.

அத்துடன் குறித்த உணவகத்தில் அசுத்தமான முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டமை, கழிவு நீர் ஒழுங்காக வெளியேற்றப்படாமை,உணவு தயாரிப்பவர்கள் கையுறை, தலையுறை பயன்படுத்தாமை போன்ற பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த உணவகத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ச-56)





# 39 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.23

போர்ப்பாதிப்புக் காரணமாக, தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. பிரிட்டனைத் தளமாகக் கொண்டு செயற்பட்டுவரும் ஐ.எல்.சி. வானொலி நேயர்கள் மற்றும் தமிழ் எய்ட் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரது நிதி உதவியில், வடமராட்சி ஊடக இல்லத்தின் அனுசரணையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. 39 குடும்பங்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியான போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளும், பாடசாலை செல்லும் 16 பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க-100)

# அனுகுண்டைத் தாங்கிய ஜப்பானைப் பின்பற்றுவோம்

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.23

உலகப்போரின்போது ஜப்பான்மீது அணுகுண்டு வீசப்பட்டது. முற்றாக அழிந்த அந்நாடு மீண்டெழுந்தது. அந்த அணுகுமுறையை நாமும் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிகளை வழங்கிய உலக நாடுகளுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மீட்புப் பணி, மருத்துவச்சேவை, விநியோகம் என சகல வழிகளிலும் உதவிகள் கிடைக்கப்பெற்றன. அடுத்தக் கட்டமாக மீள்கட்டுமானப் பணிகளைச் செய்யவேண்டியுள்ளது. இதற்கான உதவிகளும் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையுள்ளது. சுனாமி காலத்தில் இருந்த அரசாங்கம் போன்றது அல்ல தற்போதைய அரசாங்கம். சர்வதேச நாடுகளுக்கு முழு நம்பிக்கை உள்ளது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் நாட்டுக்காக உதவிகளை வழங்கிவருகின்றனர். உதவிகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்ட பின்னர் அந்நாடு மீண்டெழுந்தது. மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டனர். நாமும் அவ்வாறு செயற்பட வேண்டும். எதிரணிகளும் ஒத்துழைக்கவேண்டும் - என்றார். (ச-44)

# ஒளிவிழாப் போட்டிகளில் பேசாலை முன்னிலை

மன்னார்,டிசெ.23

மன்னார் மறைமாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான ஒளிவிழாப் போட்டிகளில், பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கைச் சார்ந்தவர்கள் முன்னிலையில் உள்ளனர். மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் பேச்சு, பாடல் போட்டிகளும், மறைக்கல்விப் பரீட்சை மற்றும் திருவிவிலியப் போட்டியும் நடத்தப்பட்டன. இதில் பங்குபற்றியவர்களுக்கு. பங்குச் சபையினரின் ஏற்பாட்டில் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், வெற்றியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். மன்னார் மறைமாவட்ட ரீதியில் நடைபெற்ற மறைக்கல்விப் பரீட்சையில் பேசாலைப் பங்கில் 100 புள்ளிகளைக் பெற்ற மாணவர்களும், தேசிய ரீதியாக நடத்தப்பட்ட திருவிவிலியப் போட்டியில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.(க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், டிசெ.23

பருத்தித்துறை நகரில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய வியாபார நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்களுக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் அறிவிட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பருத்தித்துறை நகர்ப்புறத்தில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களை பருத்தித்துறை மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இணைந்து கடந்த தினங்களில் திடீர்ப் பரிசோதனை மேற்கொண்டனர். இதன்போது சுகாதாரக்குறைபாடுகளுடன் இயங்கிய 6 உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் உணவு கையாளுபவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப. தினேஷினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் நீதிமன்றி னால் அறவிடப்பட்டது.

(ச-100)



# தொலைத்தொடர்பு இணைப்புகளை சீர்படுத்தும் மொபிட்டல் நிறுவனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் டித்வா புயல் தாக்க தின் போது வட்டுவாகல் பாலத்தின் கீழாக, இழுத்துச்செல்லப்பட்ட தொலைத்தொடர்பு இணைப்புகளை மொபிட்டல் நிறுவனத்தினர் சீர்செய் துள்ளனர். தொலைத்தொடர்பு இணைப்புகள், வட்டுவாகல் பாலத்தின் கீழாக வெள்ளப்பெருக்கின்போது, இழுத்துச் செல்லப்பட்டன. இதனால் அந்தப் பகுதிக்கான தொலைத்தொடர்புச் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனை நிறுவனத்தினர் சீர்செய்துவருகின்றனர். நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வட்டுவாகல் பாலத்துக்குள் இறங்கி இணைப்புகளைச் சீர்செய்தபோது, கோத்தாபய கடற்படைத் தளத்தில் உள்ள கடற்படை அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

(க-19)


## பெயர்மாற்றம்

சுதுமலை மானிப்பாய் வீதி, தாவடி தெற்கில் வசிக்கும் இராமசாமி ஜெலெச்சுமி ஆகிய நான் எனது பெயரை இராமசாமி ஜெலெச்சுமி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இராமசாமி ஜெயலெச்சுமி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

இராமசாமி ஜெலெச்சுமி

(CS 30947) GD


## யாழ் மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்ட அறிவிப்பு

யாழ் மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் புதிதாக இணைய விரும்பும் ஆர்வலர்கள் அனைவருக்கும் அறியத்தருவதாவது 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) பின்வருமாறு நடைபெறும்.

| விபரம் | | தகவல் |
|---|---|---|
| திகதி | : | 27.12.2025 |
| நேரம் | : | மாலை 03.00 - மாலை 05.00 |
| இடம் | : | YCMA Jaffna, Conference Hall |

இப் பொதுக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் பின்வருமாறு:

1. 2025 ஆண்டிற்கான சட்ட அறிக்கை உறுதிப்படுத்தல்.
2. கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்.
3. 2026 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்.
4. யாழ் மாவட்ட மேசைப்பந்தாட்டத்தை மேம்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள் மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல்.
5. தலைவரின் அனுமதியுடன் கொண்டுவரப்படும் வேறு ஏதேனும் விடயங்கள்.

செயலாளர்

## ST. JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY

Applications are hereby invited from qualified persons (preferably graduates in the relevant field) for the following vacancy:

**Teacher – Information & Communication Technology (ICT)**
**(English / Tamil Medium) - Grade 6 - A/L Classes**

Send your complete CV with the contact details of two non-related referees, along with photocopies of the certificates of your academic qualifications, by registered post to the address given below before 29th December 2025.

Please indicate **"Applications / ICT Teacher"** at the top left-hand corner of the envelope.

*(Only shortlisted candidates will be called for an interview)*

**The Principal,**
**St. John's College,**
**Jaffna.**

## மரண அறிவித்தல்



### திருமதி
### பத்மநாதன் தனபாக்கியலட்சுமி

நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் தனபாக்கியலட்சுமி அவர்கள் நேற்று 22.12.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ஜக்ஷனா(லண்டன்), கபிலன், கவிலக்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், றஜிந்தன் (கண்ணா-லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் கதிரமலைப்பிள்ளை, அமரர் கௌரியம்மா, கெங்கேஸ்வரி, புவனேஸ்வரி (லண்டன்), மங்கையற்கரசி (சுவிஸ்) மீனாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


**1010/18 கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 30951) GD

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 3069568**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.09.1958 | 21.12.2025 |



### அந்தோனிப்பிள்ளை ரவிநாதன்

கல்வியங்காடு யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மூர் வீதி, மன்னாரினை வசிப்பிடமாகவும் கொண்ட தமிழிசை வர்த்தக விளம்பர சேவையின் நிறுவுனர் அந்தோனிப்பிள்ளை ரவிநாதன் அவர்கள் கடந்த 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை -புஸ்பா தம்பதியரின் அன்பு மகனும், தங்கராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடேசு - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், ரஜீந்திரன் (சங்கர் -லண்டன்), ரஜினா (மன்னார்), ரஜிதா (யாழ்ப்பாணம்), ரஜிலா (மன்னார்), காலஞ்சென்ற ரஜிதரன், ரஜிகாந் (லண்டன்), ரஜீவன் (லண்டன்), ரஜிராஜ் (மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், மதிவதனன் (மன்னார்), இளவரசி (லண்டன்), றொனிகயன் (யாழ்ப்பாணம்), சுதாகரன் (பிரான்ஸ்), சிந்திகா (லண்டன்), அனுசியா (மன்னார்) ஆகியோரின் மாமனாரும், ரகுநாதன் (வவுனியா), ராங்கநாதன் (கனடா), ரவிந்திரகலா (யாழ்ப்பாணம்), ரஞ்சநாதன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற பிரேமநாதன் (திருகோணமலை), பிரபாகினி (திருகோணமலை), பிரதீபா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரமினா, லதுர்சன், யவிசன், நயனிகா, கிருசன், அர்சன், வருணிகா, சரண், அஸ்விதா, ஆருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 34/10, புதிய மூர் வீதி மன்னாரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்தார்...

நாளை மாலைவரை அவர் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளார். ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். டித்வா புயலால் அழிவுக்குட்பட்டுள்ள இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் திட்டத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்துள்ளார் என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தப் பயணத்தின்போது அவர், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## இந்தியாவுடனான...

தாவது:-

இந்தியப் பிரதமர் மோடி இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்திருந்தார். இதன்போது, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கியமான விடயங்களில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. எனினும், ஒப்பந்தங்களின் அம்சங்கள் தொடர்பில் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகவும் பெறமுடியாத நிலையே உள்ளது. எனவே, ஒப்பந்தங்களின் அம்சங்கள் தொடர்பில் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (அ-ம-44)

## கட்டைக்காடு...

டுள்ளது. வாள்கள் மற்றும் கத்தி உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வருகை தந்த குழுவாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள், வீட்டின் கதவுகள் மற்றும் இதர உடைமைகள் வன்முறைக் குழுவால் கொத்திச் சேதமாக்கப்பட்டுள்ளது என்று மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## ஆக்கிரமிப்பின்...

நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக நண்பகல் 12.30 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கண்டனப் போராட்டத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்ததாவது:-

திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் மிகவும் அநாகரிகமானது. தமிழர் தாயகத்தில் இடம்பெறும் திட்டமிட்ட கைதுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். தையிட்டி எங்களின் சொத்து. இதை எவராலும் மாற்றவோ அல்லது பறிக்கவோ முடியாது. பௌத்த சின்னங்கள் ஆக்கிரமிப்பின் கருவிகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் நடவடிக்கைகளை நாங்கள் தீர்க்கமாக எதிர்க்கின்றோம் - என்றனர். (அ-ம-66)

## பொறுமைக்கு...

முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

திஸ்ஸவிகாரைக்கு அழுத்தம் கொடுத்து, அதனை அகற்றுவதற்கு முற்பட்டால் அதற்கு எதிராக நாங்கள் கிளர்ந்து எழுவோம். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் வசமிருந்த காணியில் 98 சதவீதம் விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே, திஸ்ஸ விகாரை தொடர்பில் அநீதியான தகவல்களைப் பரப்பக்கூடாது.

இலங்கை பௌத்த நாடென்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறிதரன் உள்ளிட்டோர் புரிந்துகொள்ள வேண்டும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். திஸ்ஸ விகாரையில் பௌத்த மக்களுக்குரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகின்றது. அதற்கு எதிராக கஜேந்திரகுமாரின் ஆட்கள் வந்து போராட்டம் நடத்துகின்றனர்.

ஆனால் இவர்கள் கொழும்புக்கு வந்து சுதந்திரமாக கோவிலுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இலங்கை பௌத்த நாடென்பதால்தான் இது சாத்தியப்படுகின்றது. இலங்கையில் வேறொரு மதம் பெரும்பான்மையாக இருந்திருந்தால், அந்த மதத்துக்கு எதிராக செயற்பட்டுவிட்டு சுதந்திரமாக இருக்க முடியுமா? பௌத்த தர்மம் ஊடாக வழங்கப்பட்ட போதனைகளால் தான் பொறுமை காக்கின்றோம். ஆனால் அந்த பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை, தமிழர் தாயகத்தில் விகாரை கட்ட முடியாது என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்றது. இது தொடர்பில் இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு என்ன? வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமைகளை நாசமாக்கும் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (அ-ம-44)

## கரைதுறைப்பற்று...

கடந்த நவம்பர் மாதம் அவர் பதவி விலகிய நிலையில், உபதவிசாளரின் தலைமையிலேயே சபை நடத்தப்பட்டு வந்தது. எனவே, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் புதிய தவிசாளர் தெரிவு நேற்று இடம்பெற்றது.

21 உறுப்பினர்கள் அமர்வில் கலந்து கொண்டனர். இரகசியமான முறையில் வாக்கெடுப்பை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு, தவிசாளர் பதவிக்கான முன்மொழிவுகள் இடம்பெற்றன. இதன்படி, தமிழரசுக் கட்சியின் சார்பில் மிக்கேல்பிள்ளை ஜோன்சன் மோகனராஜா, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தொம்மைப்பிள்ளை பவுல்ராஜ், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

வாக்கெடுப்பின்போது, இமக்குலேற்றா புஸ்பானந்தன் 10 வாக்குகளையும், ஜோன்சன் மோகனராஜா 5 வாக்குகளையும், தொம்மைப்பிள்ளை பவுல்ராஜ் 6 வாக்குகளையும் பெற்றனர். எவருக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், குறைந்த வாக்குகளைப் பெற்ற ஜோன்சன் மோகனராஜா நீக்கப்பட்டு, இமக்குலேற்றா புஸ்பானந்தன் தொம்மைப்பிள்ளை பவுல்ராஜ் ஆகியோரிடையே மீண்டும் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட இமக்குலேற்றா புஸ்பானந்தன் 14 வாக்குகளையும், தொம்மைப்பிள்ளை பவுல்ராஜ் 7 வாக்குகளையும் பெற்றனர். இதையடுத்து, புதிய தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவு செய்யப்பட்டார். (அ-ம-19)

## டித்வா...

டுள்ளது. டித்வா புயல் ஏற்படுத்திய பேரழிவுகள் தொடர்பில், விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை வழங்குமாறு, உலக வங்கியை இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது. இதன்படி, இழப்புகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஜனாதிபதி அநுரவிடம், உலக வங்கியின் அதிகாரிகளால் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே, டித்வா புயலால் இலங்கைக்கு அண்ணளவாக 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தச் சேதம், இலங்கையில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 4 வீதத்துக்குச் சமனானது என்றும் உலக வங்கியின் நிபுணர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மதிப்பீட்டு அறிக்கையில், வருமான இழப்புகள், உற்பத்தி இழப்புகள் மற்றும் நிகழ்கால கட்டுமானச் செலவுகள் சேர்க்கப்படவில்லை. இவற்றை உள்ளடக்கிய முழுமையான மதிப்பீட்டு அறிக்கை கிடைக்க குறைந்தது மூன்று மாதங்களாவது தேவை என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம-44)

## 'லஞ்ச்சீற்'...

பருத்தித்துறை நகரசபை அறிவித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில், பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில், உணவகங்கள் மற்றும் உணவுப் பொருள்களை கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடன் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே, லஞ்ச் சீற் பாவனையைத் தடைசெய்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிமுதல் பருத்தித்துறை நகரசபைக்குட்ட உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் உள்ளக பயன்பாட்டில் லஞ்ச் சீற் பாவனை தடை செய்யப்பட்டிருந்தது. முற்றுமுழுதான பாவனைக்காக மூன்று மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## ராஜபக்சக்களின்...

எழுப்பியுள்ளார். இது தொடர்பில் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தினர், ராஜபக்சக்களின் நிதி உகண்டாவில் பதுக்கப்பட்டுள்ளது என்று தொடர்ச்சியாகக் கூறிவந்தனர். ஆனால், இதுவரை அந்த நிதியை மீட்கவில்லை. அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட நிதியை மீட்பதற்கு அனைத்து ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்குவோம். அந்த டொலரை மீட்பதற்குப் பொருத்தமான காலமாகவும் இக்காலமே அமைந்துள்ளது. இதற்காக சத்தியக் கடதாசிகளை வழங்கவும் தயாராக உள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படுவது அந்த இரு கட்சிகளின் தனிப்பட்ட விருப்பம். ஆனால், நாட்டின் ஜனநாயகம் பேணப்படுவதற்கு இந்த இணைவு அவசியமானது. இணைந்து செயற்பட வேண்டிய இடங்களில் எதிரணியாக நாமும் இணைந்து செயற்படுவோம் - என்றார். (அ-ம-44)

## 2 ஏக்கர்...

திஸ்ஸ விகாரைக்காக அண்ணளவாக 8 ஏக்கர் வரையான பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கடந்த பல வருடங்களாக மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அண்ணளவாக 2 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

8 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன. காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் எல்லை அமைக்கும் பணிகளுக்காக ஒருதொகுதி நிதியும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கிரவலை...

செய்யுமாறு வலியுறுத்தி நேற்றுப் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கங்கன்குளம் பகுதியில் போராட்டத்தை ஆரம்பித்த மக்கள், அங்கிருந்து செட்டிகுளம் பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று, அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், தமது கோரிக்கைகள் உள்ளடங்கிய மனுவொன்றையும் அவர்கள் ஒப்படைத்தனர். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைக்குக் கடத்தவிருந்த கஞ்சா எண்ணெய் பறிமுதல்

இலங்கைக்குக் கடத்துவதற்காக பாம்பன் அருகே நாட்டுப்படகில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 12 கோடி ரூபா மதிப்புடைய கஞ்சா எண்ணெய்யை இந்திய கடலோரக் காவல் படையினர் அண்மையில் பறிமுதல் செய்துள்ளனர்.

படகொன்றில் நால்வர் கஞ்சா எண்ணெய்ப் பொட்டலங்களை ஏற்றிக்கொண்டிருந்ததைக் கண்ட இந்திய கடலோரக் காவல் படையினர் அவர்களை மடக்கிப்பிடிக்க முயன்ற போது அவர்கள் நால்வரும் கடலில் குதித்து தப்பித்தனர். இதையடுத்து படகையும் அதிலிருந்து 9.5 லீற்றர் கஞ்சா எண்ணெய்யை யும் பறிமுதல் செய்த இந்திய கடலோரக் காவல் படையினர் அவற்றை மண்டபம் முகாமுக்கு எடுத்துச்சென்று விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (ச-56)

**வேலையாட்கள் தேவை**

K.K.S வீதி, கோண்டாவிலில் உள்ள மருதம் Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- சமையலாளர்கள்
- ரொட்டி போடுபவர்
- உணவு பரிமாறுபவர்

தொடர்பு: 077 747 4498

(CS 60240) E

**வேலை வாய்ப்பு**

நெல்லியடியில் புதிதாகத் தொடங்கப்பட்ட தூய சைவ உணவகம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள சமையற்காரர் தேவை.
உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 978 9326

(CS 60245) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 05 . 1940



மறைவு 22 . 12 . 2025

### திரு.சின்னையா கனகராசா

**(ஓய்வூதியர், யாழ். நீதிமன்றம்)**

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் மண்டைதீவு மற்றும் 37, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னையா கனகராசா அவர்கள் நேற்று (22.12.2025) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், மாணிக்கம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர், மண்டைதீவு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், அமரர்களான சிவபாக்கியம், சிவப்பிரகாசம், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், றஜிகா, விஸ்ணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராஜன், சுகந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜன், கேதுசன், கவிசன், வேணுசன், கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2025) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.37, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

(CS 30953) A

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 600 m தூரம்
- பலாலி சர்வதேச விமான நிலையம் 4 Km தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- வீடுகள் கட்டுவதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 30 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாகக் கொண்ட காணித்துண்டுகள் 25 லட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

**077 814 7389, 077 986 5457**

(CS 60246) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org